பக்கங்கள்: 06

THEEMPUNAL
# தீம்புனல்
மாலைப் பதிப்பு

theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:07 | 08.11.2023 புதன்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053




# தபால் ஊழியர்கள் வேலை நிறுத்தம்

இலங்கைத் தபால் திணைக்களத்தின் வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யும் அரசாங்கத்தின் முயற்சிக்கு எதிராக இன்றும் நாளையும் இரண்டு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை தபால் திணைக்கள ஊழியர்கள் ஆரம்பித்துள்ளனர்.

நுவரெலியா, கண்டி ஆகிய தபால் நிலையங்களை விற்பனை செய்யும் திட்டத்தை அரசாங்கம் இரத்து செய்ய வேண்டும் என அதன் இணை அழைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்தார்.




பிரிட்டிஷ் காலத்து கட்டடத்தை தனியாருக்கு விற்பனை செய்து அதன் பாரம்பரியத்தைக் கெடுக்க வேண்டாம் என தபால் திணைக்கள ஊழியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். நுவரெலியா தபால் நிலையம் தாஜ்சமுத்திராவுக்கு வழங்கப்படபோவதாக தகவல் கசிந்துள்ளது.

தபால் திணைக்கள ஊழியர்களின் போராட்டத்தை முடக்குவதற்காக உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், நவம்பர் 8, 9, 10 ஆகிய மூன்று நாட்களில் அனைத்து தபால் ஊழியர்களின் விடுமுறையையும் இரத்து செய்ய நடவடிக்கை... (பக்:02)

## குவைத்திலிருந்து வெளியேற்றப்பட்ட இலங்கைப் பெண்கள்

விசா இன்றி குவைத்தில் சட்டவிரோதமாக தங்கியிருந்து பல்வேறு இடங்களில் பணிபுரிந்த 26 இலங்கைப் பெண்கள் அங்கிருந்து நாடு கடத்தப்பட்டுள்ளனர். குவைத் இலங்கை தூதரகத்தின் உதவியுடன் அவர்கள் இன்று காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்து இறங்கினர்.

குவைத்தில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பதிவு செய்துள்ள 2000இற்கும் மேற்பட்ட வீட்டுப் பணியாளர்களில் இந்தக் குழு இலங்கைக்கு வருகை தந்துள்ளது. எஞ்சிய குழுவினரும் பகுதிகளாக இலங்கைக்கு அனுப்பப்பட்டு வருவதாகத் தூதரகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்... (பக்:02)

## யாழ்ப்பாணத்தில் நடந்த போதைப்பொருள் விருந்து

யாழ்ப்பணத்திலுள்ள பிரபல உணவகம் ஒன்றில் அண்மையில் களியாட்டு என்னும் பெயரில் இடம் பெற்ற போதை விருந்துக் கொண்டாட்டம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கொழும்பைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றே இந்த நிகழ்வுக்கு சமூக வலைத்தளங்களின் ஊடாக அழைப்பு விடுத்துள்ளனர். ஆண்களுக்கு நுழைவுச்சீட்டு 1500 ரூபாய்க்கும் அவர்களுடன் வரும் பெண்களுக்கு 1000 ரூபாய் என விளம்பரம் செய்துள்ளனர்.

முன்னதாக DJ இசையுடன் ஆரம்பித்த கொண்டாட்டம் பின்னர் மது விருந்துடன் முன்னெடுக்கப்பட அதனைத்தொடர்ந்து கஞ்சா, ஐஸ் போன்ற போதைப்பொருளையும் பாவித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

ஆனால், உணவகத்தில் மதுபானம் மாத்திரமே வழங்கப்பட்டதாகவும், அங்கு வந்த பலரும் தம் வசம் உயிர்கொல்லி போதைப்பொருளை வைத்திருந்ததாக விருந்தில் கலந்து கொண்ட சிலர் தெரிவித்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் இவ்வாறான கலாசாசர சீரழிவு நிகழ்வு தொடர்பில் பலரும் கடும் விமர்சனம் தெரிவித்துள்ளனர்.

# தபால் ஊழியர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எடுக்கப்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது. இது குறித்து அறிவிப்பை வெளியிட்டு, தபால் திணைக்களத்திற்குச் சொந்தமான எந்தவொரு தபால் நிலையமும் மூடப்படாது எனவும் மேலும் அனுமதிக்கும் வகையில் நுவரெலியா தபால் நிலையக் கட்டடத்தை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக நேற்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

வடமராட்சியில் உள்ள கரவெட்டி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய பிரதான தபால் நிலையங்களும் 28 உப தபால் நிலையங்களும் பூட்டப்பட்டிருந்தன.

அரசாங்கத்தின் கொள்கையின் பிரகாரம் பயனுள்ள முதலீட்டு வாய்ப்பு, அதனை நடத்துவதற்கு பொருத்தமான கட்டடத்தை நகர அபிவிருத்தி அதிகாரசபை வழங்கும் என அமைச்சர் பந்துல குணவர்தன உறுதியளித்துள்ளார். நுவரெலியா தபால் நிலையத்தை சுற்றுலா நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கான ஜனாதிபதியின் தீர்மானத்திற்கு தாம் முழுமையாக உடன்படுவதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். நுவரெலியா தபால் நிலையம் தற்போது பாழடைந்து காணப்படுவதால் அதனைப் பராமரிக்க முடியாது எனவும் செயல்படாத மற்றும் பயன்படுத்தப்படாத வளத்தை சிறப்பானதாக மாற்ற ஜனாதிபதியிடம் யோசனை கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சுற்றுலாத்துறையில், நுவரெலியா சுற்றுலாப் பயணிகளுக்கு மிகவும் கவர்ச்சிகரமான இடமாகும்.

குறிப்பாக, சீதா எலியா வழியாக இந்திய சுற்றுலாப் பயணிகள் வரும்



பகுதி சிறப்பு ஈர்ப்பைப் பெற்றுள்ளது. எனவே, ஹோட்டல் நிர்மானத்தின் மூலம் அந்த மாகாண மக்களின் வாழ்க்கை நிலைமைகள் மேம்படும், வேலை வாய்ப்புகள் உருவாகும், வருமான ஆதாரங்களும் பெருகும்.

எனவே, துறைக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில், தபால் நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றி, அந்த இடத்தை ஹோட்டல் திட்டத்திற்கு வழங்க நான் முற்றிலும் விரும்புகிறேன்” என அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை நுவரெலியா தபாலகத்தை விற்பனை செய்யக்கூடாது என சில சுற்றுலாப்பயணிகள் தபாலகத்தின் முன்னால் பதாகை ஏந்தினர்.






## குவைத்திலிருந்து......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைத் தூதரக அதிகாரிகள் குவைத்தின் குடிவரவுத் திணைக்களம், குற்றப் புலனாய்வுத் திணைக்களம், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு ஆகியவற்றுடன் இணைந்து இந்த வீட்டுப் பணியாளர்களுக்கு எதிரான வழக்குகளை மீளப்பெறவும், அவர்கள் செலுத்த வேண்டிய அபராத தொகையை இரத்து செய்யவும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.


அத்துடன், விமானப் பயணச்சீட்டு இல்லாத இலங்கை வீட்டுப் பணியாளர்களுக்கு இலங்கைக்கு வருவதற்கு விமான ரிக்கெட்டுகளை வழங்க குவைத்தில் உள்ள இலங்கைத் தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

# நேபாளத்துக்கு நிவாரணப் பொருட்களை அனுப்பியது இந்தியா

நிலநடுக்கத்தால் பாதிக் கப்பட்ட நேபாள மக்க ளுக்கு 21 தொன் நிவார ணப் பொருட்களை இந் தியா அனுப்பி உள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கி ழமை இந்திய விமானப் படையின் சி-30ஜே ரக சரக்கு விமானத்தில் ரூ.10 கோடி மதிப்புள்ள தார்பா லின் சீட்கள், போர்வை கள், மருந்துகள், மருத்துவ சாதனங்கள், எளிதில் தூக் கிச் செல்லும் வென்டிலேட் டர்கள் என 11 தொன்னுக் கும் மேற்பட்ட நிவாரணப் பொருட்கள் நேபாள நக ருக்கு அனுப்பி வைக்கப் பட்டன. நேற்று முன்தினம் விமானப்படையின் மற் றொரு சி-30ஜே விமானத் தில் 9 தொன்னுக்கும் மேற் பட்ட நிவாரணப் பொருட் கள் நேபாள நகருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இதுவரை மொத்தம் 21 தொன் நிவாரணப் பொருட் களை நேபாளத்துக்கு இந் தியா அனுப்பியுள்ளது.

இதுகுறித்து எக்ஸ் தளத் தில் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் கூறு



கையில், “அண்டை நாடுக ளுக்கு முதலில் உதவவேண் டும் என்ற கொள்கையை பிரதமர் மோடி வலியுறுத்தி வருகிறார். அதன்படி நெருக் கடி நேரத்தில், அண்டை நாடுகளுக்கு உதவுவதில் இந் தியா உறுதியுடன் உள்ளது” என குறிப்பிட்டுள்ளார்.

## மலேரியா மருந்து தயாரிக்க கென்யாவுக்கு அனுமதி

ஆபிரிக்காவில் மலே ரியா மருந்து தயாரிப்பதற்கு உலக சுகாதார அமைப்பு அனுமதி வழங்கிய பின்னர் கென்யா மருந்து நிறுவன மான, யுனிவர்சல் கார்ப்ப ரேஷன் லிமிடெட், ஆபி ரிக்காவின் முதல் உற்பத்தி யாளராக மாறியுள்ளது. 70% இற்கும் அதிகமான மருந் துகள் இறக்குமதி செய்யப் படும் கண்டத்தில் சுகாதாரப் பாதுகாப்பில் தன்னி றைவு அடைவதற்கான குறிப்பி டத்தக்க படியாக முன்தகுதி காணப்படுகிறது. ஆபிரிக் காவுத்துத் தேவையான மருந் துகள் இந் தியா, சீனா ஆகிய நாடுகளில் இருந்து இறக்கு மதியாகின்றன.

## 500 பேர் எகிப்திய கடவை வழியாக வெளியேறினர்

காஸாவில் சிக்கி இருந்த 500 பேர் இன்று ரஃபா வழியாக எகிப்திற்குள் நுழைந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் வெளி நாட் டினர் அல்லது இரட் டைக் குடிமக்கள், அவர்க ளைச் சார்ந்தவர்கள் என்று எகிப்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.



ஜோர்டானியர் 262 பேர், கனடாவினர் 59 பேர் இவர் களுடன் மருத்துவ சிகிச்சை தேவைப்படும் பத்தொன் பது காஸா மக்களும் எகிப் திய மருத்துவமனைகளுக்கு அனுமதிக்கப்பட்டதாக மருத்துவ வட்டாரம் தெரி வித்துள்ளது. ருமேனியா, ஜேர்மனி, மால்டோவா, உக்ரைன், பிலிப்பைன்ஸ் , பிரான்ஸ் ஆகியா நாட்ட வர்களும் செவ்வாயன்று எகிப்துக்குள் நுழைந்தனர்.

## இஸ்ரேலும் ஹமாஸும் தவறு செய்தன ஒபாமா

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ராக் ஒபாமா, இஸ்ரேலுக்கும் ஹமா ஸுக்கும் இடையிலான போரைப் பற்றிய “முழு உண்மையையும் எடுத்துக் கொள்ள வேண்டும்” என்று அமெரிக்கர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார், மோதலுக்கு அனை வருக்கும் சில பொறுப்பு கள் உள்ளன என்று கூறி னார்.

இரு தரப்பிலும் தவறு இருக்கிறது என்று அவர் சனிக்கிழமையன்று வெளி யிடப்பட்ட போட்காஸ்ட் பாட் சேவ் அமெரிக்கா விற்கு அளித்த பேட்டியில் கூறினார்.

ஹமாஸின் நடவடிக்கை கள் மற்றும் பாலஸ்தீனப் பகுதிகளை இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு இரண்டும் “பயங்கரமானது” மற்றும் “தாங்க முடியாதது” என் றும், நெருக்கடியைத் தீர்ப்பதற்கான ஒரேவழி இந்த உண்மைகளை ஒப் புக்கொள்வதுதான் என் றும் அவர் கூறினார்.


# அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டார்

அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவரும் ஆர்வல ருமான அலெஸ் பியாலி யாட்ஸ்கி பெலாரஸில் உள்ள அவரது சிறையில் தனிமைச் சிறைக்கு மாற்றப் பட்டதாக அவரது மனைவி செவ்வாய்க்கிழமை தெரி வித்தார். பியாலியாட்ஸ் கிக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் நிலையில், அவரது நாள்பட்ட நோய்கள் இருந் தபோதிலும், சிறை அதிகா ரிகள் நிலைமையை கடுமை யாக்கியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

பெலாரஸின் உயர்மட்ட மனித உரிமை வழக்கறிஞ ரும், 2022 அமைதிக்கான நோபல் பரிசு வென்றவர் களில் ஒருவருமான பியாலி யாட்ஸ்கி, பொதுஒழுங்கை மீறிய செயல்கள் மற்றும் கடத்தல் நடவடிக்கைக ளுக்கு நிதியளித்த குற்றச் சாட்டின் பேரில் மார்ச் மாதம் மூன்று சக ஊழியர்க ளுடன் தண்டிக்கப்பட் டார். எனினும், குற்றச்சாட் டுகளை அவர் மறுத்துள் ளார்.



# ஜனாதிபதித் தேர்தலில் புட்டின் போட்டி



ரஷ்ய ஜனாதிபதித் தேர் தலில் போட்டியிட முடிவு செய்துள்ளார் புட்டின். இது அவரை குறைந்தபட்சம் 2030 வரை அதிகாரத்தில் வைத்திருக்கும் என்று ராய்ட்டர்ஸ் செய்தி நிறு வனம் தெரிவித்துள்ளது. 1999 ஆம் ஆண்டின் கடைசி நாளில் போரிஸ் யெல்ட்சி னால், புட்டினுக்கு ஜனாதி பதிப்பதவி வழங்கப்பட்டது.

ஜோசப் ஸ்டாலினுக் குப் பிறகு வேறு எந்த ரஷ்ய ஆட்சியாளரையும் விட நீண்டகாலம் ஜனாதி பதியாகப் பணியாற்றியுள் ளார். கருத்துக் கணிப்புகள் விளாடிமிர் புட்டின் ரஷ் யாவிற்குள் 80% அங்கீகா ரம் பெற்றதாகக் காட்டு கின்றன. விளாடிமிர் புட் டினின் முடிவு பற்றிய செய் திகள் ஏமாற்றப்பட்டதாக வும், ஆலோசகர்கள் இப் போது பிரச்சாரத்திற்கு தயா ராகி வருவதாகவும் தம்மை அடையாளம் காட்டாத வர்கள் ராய்ட்டர்ஸிடம் தெரிவித்தனர்.

# 90 வயதானவரை 26 வயது இளைஞனாக மாற்றும் மருந்து

முதியவர்களையும் இளை ஞர்களாக மாற்றும் புதிய மருந்தை கண்டுபிடித்து உள்ளதாக கலிபொர்னியா பல்கலைக்கழக ஆராய்ச்சி யாளர்கள் தெரிவித்துள் ளது.

கலிபொர்னியா பல்க லைக்கழக விஞ்ஞானிகள் மேற்கொண்டு வரும் ஆய் வில், பன்றி இரத்தத்தில் உள்ள பிளாஸ்மாக்கள் மற் றும் நானோ துகள்களை கொண்டு E5 எனப்படும் வயது எதிர்ப்பு சிகிச்சையை எலிகளுக்கு செய்து பார்த் துள்ளனர்.

எலிகளின் வயதைக் குறைக்கும் இந்த சோதனை 70 சதவீதம் வெற்றி அடைந் துள்ளதாகவும், மனிதர்கள் மீது சோதித்தால் 80 சதவீ தம் வரை வெற்றி பெறும் என்றும் அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். இந்தச் சோதனை வெற்றி பெற்றால் 90 வயது முதியவரையும் 26 வயது இளைஞராக மாற்ற முடியும் என்று அவர் கள் தெரிவித்துள்ளனர்.

## பாலஸ்தீனத்துக்குச் செல்லும் ஒரு லட்சம் இந்தியர்

இஸ்ரேல்- ஹமாஸ் படை இடையே போர் உச்ச கட்டத்தை அடைந் துள்ளதால் இஸ்ரேலில் உள்ள பாலஸ்தீனர்களை உடனடியாக வெளியே றும் படி அந்நாடு உத்தர விட்டது. இஸ்ரேலில் சுமார் 90 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாலஸ்தீனர் கள் பணியாற்றி வருகின் றனர். போர் தொடங்கி யதும் இவர்களின் பணி உரிமத்தை இஸ்ரேல் ரத்து செய்து விட்டது. உடனடி யாக அங்கு வேலை பார்த்து வந்த பாலஸ்தீனர் கள் வெளியேறி விட்டனர். இதையடுத்து வேலை வாய்ப்பு கொள்கைகளில் இஸ்ரேல் அரசு திருத்தம் கொண்டு வந்து மாற்றி அமைத்தது. இதன் மூலம் சுமார் 1 லட்சம் இந்தியர் களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க இஸ்ரேல் முடிவு செய்துள்ளது. கட்டுமான பணிகளில் அவர்கள் ஈடு படுத்தப்பட உள்ளதாக வும், இதற்கான பேச்சு வார்த்தை நடந்து வருவ தாகவும் இஸ்ரேல் கட்டு மான நிறுவனம் தெரிவித் துள்ளது.

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
THEEMPUNAL தீம்புனல்

# விளையாட்டில் மோசமான முன் உதாரணங்கள்

வெற்றி, தோல்வி இரண்டையும் சமமாகப் பார்க்க வேண்டிய விளையாட்டில் பொறாமை, வஞ்சகம், குரோதம் ஆகியன மலிந்து விட்டன. விளையாட்டு என்பது மனிதனை மேன்மைப்படுத்த வேண்டும். ஆனால், இன்றைய விளையாட்டு வீரர்கள் விளையாட்டைச் சிறுமைப்படுத்துகின்றனர்.

கிரிக்கெட் விளையாட்டு வரலாற்றில் ரைம் அவுட் விதிப்படி இலங்கையின் அனுபவ வீரர் ஆட்டமிழக்கச் செய்யப்பட்டார். உலகக்கிண்ணத் தொரரில் அவருடைய சிறப்பான விளையாட்டை எதிர்கொள்வதற்குப் பயந்த பங்களாதேஷ் கப்டன் சதி செய்தார். அப்பீலை வாபஸ் பெறுமாறு நடுவர்கள் இரண்டு முறை கேட்டும் பங்களாதேஷ் கப்டன் மறுத்து விட்டார்.

தான் எந்தத் தவறும் செய்யவில்லை என்பதில் மத்யூஸ் உறுதியாக இருக்கிறார், மேலும் குழப்பத்திற்கு நடுவர்களையும் அவரது விளையாட்டுத்தனமற்ற நடத்தைக்காக பங்களாதேஷ் கப்டனையும் குற்றம்சாட்டினார்.

“நான் எந்த தவறும் செய்யவில்லை. நான் கிரீஸ்க்கு வந்து என்னை தயார்படுத்த இரண்டு நிமிடங்கள் உள்ளன, அதை நான் செய்தேன். பின்னர் அது ஒரு உபகரணக் கோளாறு. பொது அறிவு எங்கு சென்றது என்று எனக்குத் தெரியவில்லை, ஏனென்றால் ஷாகிப் மற்றும் வங்காளதேசம் அப்படி கிரிக்கெட் விளையாட விரும்பினால் அது அவமானகரமானது” என்றார்.

2014 இல் இலங்கை ஜோஸ் பட்லரை ரன் அவுட் செய்தபோது அவர் கப்டனாக இருந்தார். அவர் மேல்முறையீட்டை வாபஸ் பெறவில்லை. சில ஆண்டுகளுக்குப் பிறகு அவர் மன்னிப்புக் கேட்டார். இருப்பினும், நீங்களே விளையாட்டின் உணர்வைக் கடைப்பிடிக்கவில்லை. அதனை அவர் மறந்துவிட்டாலும் ரசிகர்கள் மறக்கவில்லை.

இலங்கையை வெற்றி கொண்ட பின்னர் நாகினி டாஸ் ஆடி வெறுப்பூட்டியவர்கள் பங்களாதேஷ் வீரர்கள். அந்தக் கோபம் இலங்கை வீரர்களிடமும், ரசிகர்களிடமும் இருந்தது. பங்களாதேஷை ஒரு போட்டியில் இலங்கை வீழ்த்தியதும், நாகினி டான்ஸ் ஆடினார்கள். விளையாட்டில் பழிவாங்கக் கூடாது. ஆனாலும், ஆங்காங்கே பழிவாங்கல்கள் நடைபெறுகின்றன.

பங்களாதேஷிடம் தோல்வியடைந்த இலங்கை கப்டன் கைகுலுக்க மறுத்துவிட்டார். பிறந்தநாளன்று சதம் அடித்து சாதனை செய்த விராட்டை வாழ்த்துவீர்களா என குசல் மெண்டிஸிடம் பத்திரிகையாளர்கள் கேட்ட போது, ஏன் நான் வாழ்த்த வேண்டும் எனப் பதில் கேள்வி எழுப்பினார். இவை எல்லாம் விளையாட்டின் பாரம்பரியத்துக்கு விரோதமானவை.

2004 ஆம் ஆண்டு தம்புள்ளையில் பேட்ஸ்மேன் தவறாக அவுட் ஆனதை அடுத்து மார்வன் அதபத்து அன்ட்ரூ சைமண்ட்ஸை அழைத்த நாட்கள் மறந்து போய்விட்டன. 2007 உலகக் கோப்பை கிண்ண இறுதிப் போட்டியில் எஞ்சிய ஓவர்களை முழு இருளில் இறங்கி விளையாட மஹேல ஜயவர்தன ஒப்புக் கொண்ட நாட்கள் போய்விட்டன.

அப்படிப்பட்ட வீரர்களே இலங்கையின் மாண்பைப் பாதுகாப்பார்கள்.

# கொழும்பு துறைமுக உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு அரை பில்லியன் டொலர்கள்

இலங்கையின் கொழும்பு துறைமுகத்தில் தெற்காசிய பிராந்தியத்திற்கு முக்கியமான உட்கட்டமைப்பை வழங்கக்கூடிய ஒரு ஆழ்கடல் கப்பல் கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்யும் பணிக்கு உதவுவதற்காக அரை பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான தொகையினை வழங்குவதற்கு உறுதியளித்துள்ளதாக அமெரிக்க சர்தேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (DFC) இன்று அறிவித்தது.

தனது பங்காளரின் அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உதவி செய்யும் உள்ளூர் சமூகங்களின் முன்னேற்றத்தில் முதலீடு செய்யும் மற்றும் உள்ளூர் நிதி நிலைமைகளுக்கு உட்பட) ஆகியவற்றை ஏற்படுத்துவதில் அமெரிக்கா கொண்டுள்ள நீடித்த அர்ப்பணிப்பை இம் முதலீடு மேலும் நிரூபிக்கிறது.

கொழும்பு துறைமுகத்திற்குள் அமைந்துள்ள ஆழ்கடல் மேற்கு கொள்கலன் முனையத்தின் அபிவிருத்திக்கு உதவி செய்வதற்காக Colombo West International Terminal Private Limited நிறுவனத்திற்கு வழங்கப்படும் 553 மில்லியன் டொலர் நிதியளிப்பினை ஆரம்பித்து வைப்பதற்காக DFCஇன் பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO) ஸ்கொட் நாதன் இலங்கைக்கு விஜயம் செய்தார். புதிய முனையத்தை வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கும்



மதிப்பளிக்கும் உயர்தர உட்கட்டமைப்பு வசதிகளுக்கு நிதியளிப்பை மேற்கொள்வதில் DFC கொண்டுள்ள உறுதிப்பாட்டை இப்புதிய முனையம் பிரதிபலிக்கிறது. இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அதன் பிராந்திய பொருளாதார ஒருங்கிணைப்பு (இந்தியாவுடன்

நிகழ்வில் வெளிநாட்ட மைச்சர் அலி சப்ரி, ஜனாதிபதி பணிக்குழுவின் தலைமை அதிகாரியும் தேசிய பாதுகாப்பு ஆலோசகருமான சாகல ரத்நாயக்க மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங் ஆகியோர் பிரதம நிறைவேற்று அதிகாரி நாதனுடன் இணைந்து கொண்டனர்.

# கைப்பற்றும் போதைப் பொருட்களை ஏன் எரிப்பதில்லை?

போதைப்பொருட்களைக் கைபற்றுவதாகவும் ஆனால், அந்த போதைப் பொருட்களுக்கு என்ன நடக்கிறது எனத் தெரியவில்லை.

கடந்த நான்கு வருடங்களில் பிடிக்கப் பட்ட போதைப்பொருட்களுக்கு என்ன செய்யப்பட்டது. ஏன் அவர் எரிக்கப்படவில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தில் இன்று (08) கேள்வி எழுப்பினார்.

வனாத்தவில்லுவில் போதைப்பொருள் எரியூட்டும் இயந்திரம் நிறுவப்பட்டுள்ளதாகவும், தற்போது நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக மாதிரிகளை எடுத்து வைத்து விட்டு தினமும் பிடிபடும் போதைப் பொருட்களை எரிக்க முடியும் எனவும் பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பதிலளித்தார்.

# கிரிக்கெட் அதிகாரிகளுக்கு எதிராக நாளை வாக்கெடுப்பு

இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரிகள் பதவி விலக வேண்டும் என்ற கூட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் நாளை (9) பாராளுமன்றத்தில் விவாதம் நடத்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டுள்ளதாக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

# நாட்டில் பொலிஸ் மா அதிபர் இல்லை

பொலிஸ் மா அதிபரின் சேவை நீடிப்புக்கு அரசியலமைப்பு பேரவை அங்கீகாரம் வழங்காததால், இந்நாட்டில் பொலிஸ் மா அதிபர் இல்லை எனவும் இதனால் காவல்துறை அராஜகமாகியுள்ளதாகவும் கொழும்பு மாவட்ட உறுப்பினர் விமல் வீரவன்ச இன்று (08) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டின் சட்டம் ஒழுங்குடன் விளையாட வேண்டாம் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# நாட்டை சீர்குலைக்கும் செயல்களை ஆதரிக்காதீர்கள் வஜிர அபேவர்தன

16 லட்சம் அரசதுறை ஊழியர்களையும் 80 லட்சம் தனியார் துறை ஊழியர்களையும் பலப்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கான முறையான வேலைத் திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்துள்ளார். ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்படும் இந்த வேலைத்திட்டத்தின் வெற்றியின் ஊடாக எதிர்காலத்தில் மின்சாரம், எரிவாயு, எரிபொருளின் விலைகளை குறைத்து, மக்களுக்கு சிறந்த பொருளாதாரத்தை உருவாக்க முடியும். இந்த வேலைத்திட்டத்தை சீர்குலைக்கும் செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்க வேண்டாம் என்று பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (07) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன இவ்வாறு தெரிவித்தார்.



# வெளிநாட்டவர்களுக்கு நிலம் எதுவும் விற்கப்படமாட்டாது பந்துல குணவர்தன

ஷங்ரிலா ஹோட்டலை நிர்மானிப்பதற்கு காலி முகத்திடல் நிலத்தை விற்பனை செய்ததன் பின்னர் எந்தவொரு நிலத்தையும் வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்யாமல் இருப்பதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரும், வெகு



ஜன ஊடகத்துறை அமைச்சருமான கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (07) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

அரசாங்க வேலைத்திட்டங்களுக்காக எந்த நிலமும் குத்தகை அடிப்படையில் வழங்கப்படும். புறக்கோட்டை, கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, பெந்தோட்டை, ஹிக்கடுவ, அனுராதபுரம் போன்ற எந்தவொரு புகையிரத நிலையத்திற்கு அருகாமையிலும் புகையிரத நகரம் ஒன்றை (Station Plaza) அமைக்க முதலீட்டாளர்கள் முன்மொழிந்தால், அந்தப் பிரேரணையை அமைச்சரவையில் சமர்ப்பித்து அனுமதியைப் பெற்று, அதனை மிகவும் வெளிப்படைத் தன்மையுடன் கையாள்வதற்காக குழுவொன்றை நியமிப்பேன் என தெரிவித்தார்.

# பணிப்பாளர் டாக்டர் விஜித் குணசேகர நீக்கப்பட்டார்



தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்தின் (NMRA) பிரதம நிறைவேற்று அதிகாரி டாக்டர் விஜித் குணசேகர தனது பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது. NMRA இன் குழு உறுப்பினர்கள் எடுத்த கூட்டு முடிவின் அடிப்படையில் அவர் நீக்கப்பட்டுள்ளார்.

போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி தரமற்ற மனித நரம்பு வழி இம்யூனோகுளோபுலின் (IVIG) இறக்குமதி செய்யப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பாக டாக்டர் குணசேகர சர்ச்சையில் சிக்கினார். சுகாதார அமைச்சின் வழங்கல் பிரிவு பணிப்பாளர் டாக்டர் குணசேகர, சுகாதார அமைச்சின் விநியோகப் பிரிவு பணிப்பாளர் டாக்டர் கபில விக்கிரமநாயக்க தரமற்ற மனித நரம்பு இம்யூனோகுளோபுலின் (IVIG) ) இறக்குமதிக்காக போலி ஆவணங்களை தயாரித்த நிறுவனத்தின் உரிமையாளர் ஆகியோருக்கு பயணத் தடை விதிக்கப்பட்டது. டாக்டர் விஜித் குணசேகர சமீபத்தில் NMRA இல் பல முக்கிய ஆவணங்களை அழித்ததாக அரசாங்க மருந்தாளுநர்கள் சங்கத்தால் கூறப்பட்டது.

என்.எம்.ஆர்.ஏ தலைமை நிர்வாக அதிகாரி பதவி விலகும்படி கேட்கப்பட்ட போது அவர் மறுத்துவிட்டார். அதன் முன்னாள் தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான வைத்தியர் விஜித் குணசேகரவின் தலைமையிலான NMRA ஆனது அண்மைக் காலத்தில் தரம் குறைந்த மருந்துகளின் வருகை தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டுள்ளது.

# தரமற்ற டீசல் இறக்குமதி செய்யப்பட்டதாக சஜித் குற்றச்சாட்டு

அண்மையில் சிங்கப்பூரிலிருந்து வந்த எண்ணெய் தாங்கியிலிருந்து தரமற்ற எரிபொருள் விநியோகம் செய்யப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் எம்.பி சஜித் பிரேம



தாச கோரிக்கை விடுத்துள்ளார். 40,000 மெற்றிக் தொன் டீசல் கொண்ட FOS Power என்ற எண்ணெய் தாங்கி நவம்பர் 05 ஆம் திகதி சிங்கப்பூரில் இருந்து வந்த பின்னர் தற்போது கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. டீசல் தரம் குறைந்ததாக இரண்டு ஆய்வக அறிக்கைகள் தெரிவித்த போதிலும் கொலனாவையிலிருந்து தரமற்ற எரிபொருளை பொதுமக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார்.

லங்கா இந்தியன் ஆயில் நிறுவனம் (எல்.ஐ.ஓ.சி) தரப் பரிசோதனை கோரியுள்ளதாகத் தெரிவித்த சஜித் நவம்பர் 05 மற்றும் 06 ஆம் திகதிகளில் மாதிரி சோதனைகள் நடத்தப்பட்டதன் பின்னர் எரிபொருள் கையிருப்பு தரமற்றது என்பது நிரூபிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

# இந்திரிகா ரத்வத்தேவுக்கு ஐ.நாவில் புதிய பதவி

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ், ஆப்கானிஸ்தானுக்கான ஐ.நா உதவிப் பணியகத்தின் புதிய பிரதி சிறப்புப் பிரதிநிதியாகவும் ஆப்கானிஸ்தானில் வதிவிட ஒருங்கிணைப்பாளராகவும் இலங்கையின் இந்திரிகா ரத்வத்தே நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் (ஐ.நா) அறிக்கையின் படி, இந்திரிகா ரத்வத்த மனிதாபிமான ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றுவார்.

"அஜர்பைஜானின் ரமீஸ் அலக்பரோவுக்குப் பிறகு ரத்வத்தே பதவியேற்றார், அவருக்குச் செயலாளர் நாயகம் அவருடைய அர்ப்பணிப்பான சேவைக்கு நன்றியுள்ளவர்.



பொதுச்செயலாளர் டேனியல் எண்ட்ரெஸின் சேவையை இடைக்கால துணை சிறப்பு பிரதிநிதி, குடியிருப்பாளர் மற்றும் மனிதாபிமான ஒருங்கிணைப்பாளராகவும் அங்கீகரிக்கிறார்" என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திரிகா ரத்வத்தே ஐக்கிய நாடுகள் சபையில் 1992 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் அருகிலுள்ள பாலஸ்தீன அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் நிவாரண மற்றும் வேலை முகாமையின் அகதிகள் விவகார அதிகாரியாக தனது பணியைத் தொடங்கினார். அவர் 1993 இல் முன்னாள் யூகோஸ்லாவியாவில் போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினாவிலும் பின்னர் குரோஷியாவிலும் போரின்போது UNHCR இலும் பணிபுரிந்தார்.

# தனி ஒருவனாக போராடி ஆப்கானை வீழ்த்திய மக்ஸ்வெல்

மும்பை வான்கடேயில் நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் 50 ஓவர்களில் 5 விக்கெட்களையிழந்து 291 ஓட்டங்கள் எடுத்தது. 292 என்ற இமாலய இலக்கை நோக்கி களமிறங்கிய அவுஸ்திரேலியா 18.3, ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து தடுமாறிய போது களத்துக்கு வந்த மக்ஸ்வெல் சதுராட்டம் ஆடி இரட்டைச் சதத்துடன் வெற்றிக் கனியைப் பறித்தார்.



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ரஹ்மானுல்லா குர்பாஸ் 21, ரஹ்மத் ஷா 30, கப்டன் ஹஸ்மதுல்லா ஷாகிதி 26, அஸ்மதுல்லா ஓமர்ஸாய் 22, மொகமது நபி 12 ஓட்டங்கள்கள் எடுத்து சீரான இடைவெளியில் ஆட்டமிழந்தனர். ரஷீட் கான் 35 ஓட்டங்கள். மறுபுறம் அதிரடியாக விளையாடிய இப்ராகிம் ஸத்ரன் ஆட்டமிழக்காமல் 129 ஓட்டங்கள் அடித்தார்.

நடப்பு உலகக் கிண்ணத்தில் ஆப்கானிஸ்தான் அணிக்காக சிறப்பாக விளையாடி வரும் வீரராக இருந்து வருகிறார் ஸத்ரன். ஸ்டார்க், ஹேசில்வுட், கம்மின்ஸ் போன்ற அவுஸ்திரேலியாவின் லெஜெண்ட்களின் பந்துவீச்சை எளிதாக சமாளித்த அவர், சீரான இடைவெளியில் பவுண்டரிகள் மற்றும் சிக்ஸர்களை விளாசவும் தவறவில்லை. ஜோஷ் ஹேசில்வுட் வீசிய 44 ஆவது ஓவரில் தனது முதல் உலகக்கிண்ண சதத்தை பதிவுசெய்தார்.

2015 உலகக்கிண்ணப் போட்டியில் ஸ்கொட்லாந்துக்கு எதிராக சமியுல்லா ஷின்வாரி 147 பந்துகளில் 96 ஓட்டங்கள் எடுத்தே ஆப்கன் வீரரின் அதிகபட்ச ஓட்டமாக இருந்தது. ஸத்ரன் அதனை முறியடித்தார். 21 வயது, 330 நாட்களில் சதம் எடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. குறைந்த வயதில் உலகக் கிண்ணத் தொடரில் சதம் அடித்தவர்களின் பட்டியலில் அயர்லாந்தின் பால் ஸ்டெர்லிங், அவுஸ்திரேலியாவின் ரிக்கி பாண்டிங், இலங்கையின் அவிஷ்கா பெர்னாண்டோ ஆகியோரைத் தொடர்ந்து நான்காவது இளம் வீரராக இடம்பிடித்தார்.

292 எனும் இமாலய இலக்கை நோக்கி களம் இறங்கிய அவுஸ்திரேலியாவுக்கு ஆப்கானிஸ்தான் வீரர்கள் நெருக்கடி கொடுத்தனர். நவீன் உல் ஹக் வீசிய 2 ஆவது ஓவரின் 2 ஆவது பந்தில் ட்ராவிஸ் ஹெட், டக் அவுட்டாகி வெளியேறி னார். அடுத்து வந்த மிட்செல் மார்ஸையும் நவீன் உல் ஹக் வெளியேற்றினார். 24 ஓட்டங்கள் எடுத்த மிட்செல் மார்ஷ் எல்.பி.டபிள்யூ மூலம் ஆட்டமிழந்தார்.

ஒன்பதாவது ஓவரை வீசிய அஸ்மத்துல்லா ஓமர்சாய், முதல் பந்தில் 18 ஓட்டங்கள் எடுத்திருந்த டேவிட் வார்னரை க்ளீன் போல்டாக்கிய அவர், அடுத்த பந்தில் ஜோஷ் இங்லிஷை டக் அவுட் செய்தார். 10 ஓவர்களுக்குள் 4 விக்கெட்களை இழந்தது அவுஸ்திரேலியா.

18.3 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 91 ஓட்டங்கள் எடுத்து தோல்வியின் விளிம்பில் இருந்த அவுஸ்திரேலியாவை ஆபத்பாந்தவனாக மக்ஸ்வெல் காப்பாற்றினார். மக்ஸ்வெல் கொடுத்த அருமையான கச் தவறவிடப்பட்டது.

கிளேன் மேக்ஸ்வெல் மிடில் ஆர்டரில் நங்கூரமாக நின்று அதிரடியாக விளையாடினார். அவருக்கு கப்டன் பட் கமின்ஸ் சிங்கிள்களை எடுத்து ஸ்ட்ரைக்கை கொடுத்ததை பயன்படுத்திய மக்ஸ்வெல் தனி ஒருவனாக ஆப்கானிஸ்தான் பவுலர்களை பந்தாடி அரைசதம் கடந்து அவுஸ்திரேலியாவை வெற்றிப் பாதைக்கு அழைத்து வந்தார். நேரம் செல்லச் செல்ல அதிரடியாக விளையாடி சதமடித்த அவர் காலில் காயத்தை சந்தித்து வலியால் களத்திலேயே படுத்தார். ஆனாலும் அதற்கெல்லாம் அசராமல் முதலுதவிகளை எடுத்துக் கொண்டு ஒற்றைக் கால் தெம்புடன் தொடர்ந்து அடித்து நொறுக்கிய அவர் 21 பவுண்டரி 10 சிக்ஸருடன் இரட்டை சதமடித்து 201* (128) ஓட்டங்கள் விளாசி 46.5 ஓவரிலேயே அவுஸ்திரேலியா 3 விக்கெட் வித்தியாசத்தில் காலத்திற்கும் மறக்க முடியாத மகத்தான வெற்றி பெறவைத்தார்.

உலகக் கிண்ண வரலாற்றில் சேசிங் செய்யும் போது இரட்டை சதமடித்த முதல் வீரர் என்ற உலக சாதனையும் அதிக பட்ச ஸ்கோர் பதிவு செய்த வீரர் என்ற வரலாற்றையும் மேக்ஸ்வெல் படைத் துள்ளார். அவருடன் கமின்ஸ் 12* (68) ஓட்டங்கள் எடுத்து இந்த மகத்தான வெற்றியில் பங்காற்றினார்.

இதற்கு முன் 2011 உலகக் கோப்பையில் இந்தியாவுக்கு எதிராக இங்கிலாந்தின் ஆண்ட்ரூ ஸ்ட்ராஸ் 158 ஓட்டங்கள் எடுத்ததே முந்தைய சாதனையாகும்.

வரலாற்றை மாற்றிய இப்ராகிம் சத்ரான்

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான உலககிண்ண லீக் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி வீரர் இப்ராகிம் சத்ரான் சதம் அடித்து புதிய வரலாறு படைத்துள்ளார்.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான இப்ராகிம் சத்ரான், ஆட்டமிழக்காது 143 பந்துகளில் 129 ஓட்டங்கள் எடுத்தார். ஆப்கானிஸ்தான் வீரர் ஒருவர் உலகக்கிண்ணத் தொடரில் சதம் அடிப்பது இதுவே முதல் முறை.

291 ஓட்டங்கள் எடுத்ததன் மூலம் உலகக் கிண்ணத் தொடரில் அதிகபட்ச ஓட்டங்களைப் பதிவு செய்தது ஆப்கானிஸ்தான். கடைசி 10 ஓவர்களில் மட்டும் 96 ஓட்டங்கள் சேர்த்த ஆப்கானிஸ்தான், உலகக் கிண்ணத்தில் கடைசி 10 ஓவர்களில் எடுக்கப்பட்ட அதிகபட்ச ஓட்டங்கள் என்ற சாதனையையும் பதிவு செய்தது.



21 வருடம் 330 நாட்களில் இதை அடித்துள்ள அவர் உலகக் கிண்ண வரலாற்றில் வலுவான அவுஸ்திரேலியாவுக்கு எதிராக மிகவும் இளம் வயதில் சதமடித்த வீரர் என்ற சாதனையும் படைத்தார். இதே தொடரில் நியூஸிலாந்தின் ரச்சின் ரவீந்தரா 23 வயதில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக சதமடித்திருந்ததே முந்தைய சாதனையாகும்.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 08.11.2023 அன்று வெளியிடப்பட்டது.